யாழ். வலயக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

Field Work Centre

FWC

தவணைப் பரீட்சை, யூன் - 2016
Term Examination, June - 2016

தரம் :- 13 (2016)	புள்ளித்திட்டம்	வணிகக்கல்வி

வணிகக்கல்வி – I

01)	**4**	07)	**4**	13)	**4**	19)	**2**	25)	**4**
02)	**3**	08)	**1**	14)	**1**	20)	**4**	26)	**5**
03)	**2**	09)	**2**	15)	**3**	21)	**4**	27)	**3**
04)	**3**	10)	**5**	16)	**3**	22)	**3**	28)	**4**
05)	**5**	11)	**3**	17)	**5**	23)	**5**	29)	**2**
06)	**3**	12)	**2**	18)	**1**	24)	**2**	30)	**4**

$(2 \times 30 = 60$ புள்ளிகள்)

31) பலம் பலவீனம் $(2 \times \frac{1}{2} = 1$ புள்ளி)

வாய்ப்புக்கள் அச்சுறுத்தல் $(2 \times \frac{1}{2} = 1$ புள்ளி)

32) (அ) அரச வருமானம் அரச செலவினம் $(2 \times \frac{1}{2} = 1$ புள்ளி)

(ஆ) விருப்பம் நிதி ஆற்றல் $(2 \times \frac{1}{2} = 1$ புள்ளி)

33) (அ) முகாமையாளர் (1 புள்ளி)

(ஆ) நேர்வரி நேரில்வரி $(2 \times \frac{1}{2} = 1$ புள்ளி)

34) (அ) கரை கடந்த கம்பனி (1 புள்ளி)

(ஆ) சமூக முயற்சியாண்மை
பெண்கள் முயற்சியாண்மை
உள்ளக முயற்சியாண்மை $(2 \times \frac{1}{2} = 1$ புள்ளி)

35) (அ) சமிஞ்சைகளும் குறியீடுகளும், உள்ளக $(2 \times \frac{1}{2} = 1$ புள்ளி)

(ஆ) Fitch Rating Lanka (PVT) LTD
RAM Rating Lanka (PVT) LTD
Moody's Investors service $(2 \times \frac{1}{2} = 1$ புள்ளி)

36) (அ) இறக்குமதிக் குறிப்பு (1 புள்ளி)

(ஆ) பட்டியல் (1 புள்ளி)

37) (அ) ஆளிடைத் தொடர்பு வகிபாகம்
தகவலளிப்பு வகிபாகம்
தீர்மானம் எடுத்தல் வகிபாகம் $(2 \times \frac{1}{2} = 1$ புள்ளி)

(ஆ) தலைமைத்துவம் (1 புள்ளி)

38) (அ) Jit முறை (1 புள்ளி)

(ஆ) மொத்ததர முகாமைத்துவம் (1 புள்ளி)

39) (அ) சந்தைப்படுத்தல் எண்ணக்கரு
வாடிக்கையாளர் எண்ணக்கரு $(2 \times \frac{1}{2} = 1$ புள்ளி)

(ஆ) சந்தைப்படுத்தல் கலவை (1 புள்ளி)

40) (அ) மனிதவளத் திட்டமிடல்
ஊழியர் அறிக்கை
கொடுப்பனவு அறிக்கை
பயிற்சியும் மதிப்பீடும்
செயற்திறன் மதிப்பீடு $(2 \times \frac{1}{2} = 1$ புள்ளி)

(ஆ) வணிக எண்ணம் (1 புள்ளி)

41) ✶ பூகோளமயமாதல்
✶ இலத்திரனியல் வணிகம்
✶ இலத்திரனிணல் பணம்
✶ சூழல் தொடர்பான ஆர்வம் காட்டல்
✶ வணிகச் சமூகப் பொறுப்புக்கள் தொடர்பாகக் கவனத்திற் கொள்ளல் $(4 \times \frac{1}{2} = 2$ புள்ளிகள்)

42) (அ) ✶ கைத்தொழில் அபிவிருத்திச்சபை
✶ கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனம் $(2 \times \frac{1}{2} = 1$ புள்ளி)

(ஆ) ✶ தற்காலிக வங்கி மேலதிகப்பற்று
✶ நிலையான வங்கி மேலதிகப்பற்று $(2 \times \frac{1}{2} = 1$ புள்ளி)

43) (அ) ✶ திறைசேரி முறி
✶ ரூபா கடன் பிணைப் பத்திரம் $(2 \times \frac{1}{2} = 1$ புள்ளி)

(ஆ) ✶ வியாபார வங்கிகள்
✶ முயற்சியாண்மை மூலதனக் கம்பனிகள் $(2 \times \frac{1}{2} = 1$ புள்ளி)

44) ✶ டொலர் = ரூபா 147 சதம் 00
✶ ஐக்கிய இராச்சியம் = ரூபா 210 சதம் 00
✶ யூரோ = ரூபா 166 சதம் 07
✶ சுவிஸ்பிராங் = ரூபா 150 சதம் 43 $(4 \times \frac{1}{2} = 2$ புள்ளிகள்)

45) ✶ உரிமம் பெற்ற வணிக வங்கிகள்
✶ உரிமம் பெற்ற சிறப்பியல்பு வங்கிகள்
✶ பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகள்
✶ கூட்டுறவு கிராமிய வங்கிகள்
✶ சிக்கனக் கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்கள் $(4 \times \frac{1}{2} = 2$ புள்ளிகள்)

46) ✶ முகாமைத்துவத்தின் பலவீனம்
✶ திட்டமிடல் குறைபாடு காணப்படல்
✶ நவீன தொழில் நுட்பங்களை பயன்படுத்தாமை
✶ நிதியீட்டலில் காணப்படும் சிரமம்
✶ சந்தைப்படுத்தல் பிரச்சினைகள்
✶ வளர்ச்சியடைந்த நிறுவனங்களால் ஏற்படும் போட்டிகள் $(4 \times \frac{1}{2} = 2$ புள்ளி)

47) ✶ கணினி உதவியுடனான வடிவமைப்பு
✶ கணினி உதவியுடனான உற்பத்தி
✶ கணினியுடன் ஒருங்கிணைந்த உற்பத்தி
✶ கணினி எண்சார் கட்டுப்பாட்டகம் $(4 \times \frac{1}{2} = 2$ புள்ளிகள்)

48) ✶ வங்கிகளுக்கிடையிலான அழைப்புக் கடன் சந்தை
✶ உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தை
✶ திறைசேரி உண்டியல் சந்தை
✶ வணிகப் பத்திரங்கள் சந்தை $(4 \times \frac{1}{2} = 2$ புள்ளிகள்)

49) (அ) ✶ வேலை ஒப்பந்தங்கள்

✶ இலங்கை தொழிலாளர் சட்டங்கள் $(2 \times \frac{1}{2} = 1$ புள்ளி)

(ஆ) ✶ பணியாளர்களின் குறிப்பேடு

✶ தகவல் பத்திரம்

✶ பழைய ஊழியர்களைப் பயன்படுத்தல்

✶ வீடியோ திரைப்படம்

✶ நிறுவனத்தினுள் களச் சுற்றுலா $(2 \times \frac{1}{2} = 1$ புள்ளி)

50) (அ) ✶ ESS : நிறைவேற்று உதவிமுறைமை

✶ PTS : கொடுக்கல் வாங்கல் செயன்முறைமை $(2 \times \frac{1}{2} = 1$ புள்ளி)

(ஆ) ✶ வணிகக் கருமங்களை கொண்டு நடத்துவதற்கான வழிகாட்டலுக்கு

✶ வணிகம் தொடர்பாக அக்கறை காட்டும் தரப்பினருக்கு அது தொடர்பான சிறந்த தெளிவினைப் பெற்றுக் கொடுப்பதற்கு

✶ வணிகத்திற்கு தேவையான நிதி வசதிகளைப் பெற்றுக் கொள்வதற்கு $(2 \times \frac{1}{2} = 1$ புள்ளி)

வணிகக்கல்வி – II

பகுதி - I

01) (i) (அ) 1. எண்ணங்கள்

2. நிகழ்வுகள்
3. தனி நபர்கள்
4. அமைப்புக்கள்
5. செயற்பாடுகள்
6. தகவல்கள்
7. அனுபவங்கள்
8. இடங்கள் $(4 \times \frac{1}{2} = 2$ புள்ளிகள்)

(ஆ) 1. நிலம்

2. உழைப்பு
3. முயற்சி
4. தகவல்
5. மூலதனம்
6. காலம்
7. அறிவு $(4 \times \frac{1}{2} = 2$ புள்ளிகள்)

(ii) (அ)

அக்கறை செலுத்தும் தரப்பினர்	வணிகம் எதிர்பார்க்கும் பங்களிப்புக்கள்
1. உரிமையாளர்கள்	தேவையான மூலதனப் பங்களிப்பினைப் பெற்றுக் கொள்ளல். வாழ்தன்மையினை உறுதிப்படுத்துவதற்கு
2. முகாமையாளர்	வணிகத் திட்டத்தைச் சரியான முறையில் செயற் படுத்துதல் சரியான தீர்மானமெடுத்தல்
3. ஊழியர்கள்	ஊழிய வினைத்திறனை அதிகரித்துக் கொள்வ தற்கு ஊழியர்களின் வேலையில் திருப்தியினை ஏற்படுத்தல்.
4. கடன் வழங்குநர்கள்	தொடர்ச்சியாகத் தேவைப்படுகின்ற நிதியினை ஈட்டிக் கொள்வதற்கு
5. அரசு	சிறப்புச் சலுகைகளைப் பெற்றுக் கொள்வதற்கு, உட்கட்டமைப்பு வசதிகளைப் பெற்றுக்கொள்வதற்கு

6. வாடிக்கையாளர்கள்	குறிப்பிட்ட பொருட்கள் அல்லது சேவைகளுக்கான சந்தையினைப் பாதுகாத்துக் கொள்வதற்கு
7. வழங்குனர்கள்	தரமான மூலப் பொருட்களை வழங்குதல் உரிய நேரத்தில் மூலப் பொருட்களை வழங்குதல்

(குறிப்பிட $2 \times \frac{1}{2} = 1$ புள்ளி)

(விளக்கம் $2 \times \frac{1}{2} = 1$ புள்ளி)

(ஆ) 1. தொட்டுணர முடியாத தன்மை
2. களஞ்சியப்படுத்த முடியாத தன்மை
3. வழங்குநரிடமிருந்து வேறுபடுத்த முடியாது
4. பல்லினத் தன்மையைக் கொண்டிருத்தல் ($4 \times \frac{1}{2} = 2$ புள்ளிகள்)

(iii) (அ) 1. முறையான பொருளாதார அபிவிருத்தியும் வளர்ச்சியும்
2. நிறைதொழில் மட்டம்
3. பொருளாதார உறுதிப்பாடு
4. நியாயமான வருமானப் பரம்பல்
5. சிறந்த சர்வதேச வியாபாரம் ($4 \times \frac{1}{2} = 2$ புள்ளிகள்)

(ஆ) 1. செலுத்த வேண்டிய வரியை சரியான நேரத்தில் செலுத்துதல்
2. உற்பத்திக்கு உள்நாட்டு வளங்களைப் பயன்படுத்துதல்
3. வேலைவாய்ப்பினை வழங்குதல்
4. அரச கொள்கையை பின்பற்றுதல்
5. சூழலைப் பாதுகாக்கும் முறையில் வணிக நடவடிக்கைகளில் ஈடுபடுதல்
6. மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு பங்களிப்புச் செய்தல்
7. புதிய பொருட்களைக் கண்டுபிடித்தல்
8. அந்நிய செலாவணியை பெற்றுக் கொள்வதற்கு பங்களிப்பு செய்தல்

($4 \times \frac{1}{2} = 2$ புள்ளிகள்)

(iv) 1. **வாடிக்கையாளர்கள் :**
தரமான பொருட்கள் சேவைகளை நியாயமான விலையில் விநியோகித்தல் மற்றும் நுகர்வோர் உரிமைகளை பாதுகாத்தல்.

2. **ஊழியர்கள் :**
மனிதாபிமான முறையில் நடாத்துவதுடன் மற்றும் சிறந்த ஊழியர் தொடர்புகளைப் பேணி சுகாதார வசதிகளையும் தொழிற் பாதுகாப்பையும் வழங்குதல்.

3. **உரிமையாளர்கள் :**
உரிமையாளர்களின் முதலீட்டுக்கு நியாயமான உழைப்பையும் பொருளாதார நன்மைகளையும் பெற்றுக் கொடுத்து வினைத் திறனாகவும் நேர்மையாகவும் முகாமைத்துவக் கருமங்களை நெறிப்படுத்தல்.

4. **சமூகம் :**
வரியினை ஒழுங்காக செலுத்தி, வேலை வாய்ப்புக்கு பங்களிப்பு செய்து பசுமை உற்பத்தியினை மேற்கொண்டு சூழலுக்கு நன்மை பயக்கும் வகையில் செயலாற்றல்.

(குறிப்பிட $4 \times \frac{1}{2} = 2$ புள்ளிகள்)

(விளக்கம் $4 \times \frac{1}{2} = 2$ புள்ளிகள்)

(v) (அ) நுகர்வோன் செலுத்துகின்ற பணத்திற்குப் போதுமானளவு திருப்தியினைப் பெற்றுக் கொடுப்பதை உறுதிப்படுத்துமுகமாக வழங்கப்பட்டுள்ள சட்ட ரீதியான பாதுகாப்பு நுகர்வோர் பாதுகாப்பாகும். (2 புள்ளிகள்)

(ஆ) 1. அறியும் ஊக்கத்துடன் செயலாற்றல்
2. செயற்பாட்டு ரீதியாக பங்களித்தல்
3. சமூகம் தொடர்பாகக் கவனம் செலுத்தல்
4. சூழல் பற்றிய அறிவு
5. ஏனையோருடன் இணைந்து செயற்படல் ($4 \times \frac{1}{2} = 2$ புள்ளிகள்)

02) (i) (அ) 1. விற்பனை அதிகரிக்கும்
2. இலாபம் அதிகரிக்கும்
3. மேம்படுத்தலை இலகுபடுத்தலாம்
4. அழிவுகள் மற்றும் சேதங்களைக் குறைக்கலாம்
5. நன்மதிப்பு அதிகரிக்கும்
6. குறிப்பிட்ட சில உற்பத்திப் பொருட்களுக்கு தரச்சான்று கட்டாயமாக்கப்பட்டுள்ளமை ($4 \times \frac{1}{2} = 2$ புள்ளிகள்)

(ஆ) 1. தரமான மூலப்பொருட்களைப் பயன்படுத்தல்.
2. உற்பத்தி செய்முறையின் போது பரிசோதித்தல்
3. முடிவுப் பொருட்களை எழுமாற்றாகப் பரிசோதித்தல்
4. தரம் கெடாதவாறு பொருட்களைக் களஞ்சியத்தில் பேணல். ($4 \times \frac{1}{2} = 2$ புள்ளிகள்)

(ii) (அ) 1. வரையறுக்கப்படாத பொறுப்பு.
2. பதிவு செய்தல் கட்டாயமில்லை.
3. சட்டஆளுமை அற்றது.
4. நீடித்த வாழ்வு காணப்படாமை. ($4 \times \frac{1}{2} = 2$ புள்ளிகள்)

(ஆ) 1. கூடுதலான மூலதனத்தைத் திரட்டக் கூடியதாக இருத்தல்.
2. பொறுப்புக்கள் பலரிடையே பங்கிடப்பட முடிதல்.
3. பலரின் இயலுமைகளையும் திறமைகளையும் ஒன்று சேர்க்க முடிதல்.
4. பங்காளர் பலரின் கருத்துக்களை கவனத்தில் எடுப்பதன் ஊடாக சிறந்த தீர்மானம் எடுக்கலாம். ($4 \times \frac{1}{2} = 2$ புள்ளிகள்)

(iii) (அ) 1. சுதந்திரமான அமைப்பு
2. சுயமாக இணைந்த தனிநபர் அமைப்பொன்றிருத்தல்.
3. அங்கத்தவர்களின் சம உரிமை
4. தேவைகளும் எதிர்பார்ப்புக்களும் பொதுவாகக் காணப்படல்.
5. ஜனநாயக ரீதியான நிர்வாகத்துடன் கூடிய வணிகமொன்றாயிருத்தல். ($4 \times \frac{1}{2} = 2$ புள்ளிகள்)

(ஆ) 1. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப் பத்திரம்
2. உப விதிகளின் பிரதிகள் இரண்டு
3. முன்மொழியப்பட்டுள்ள பொருளாதாரக் கருமங்களின் பொருத்தப்பாட்டினைக் காட்டும் அறிக்கை.
4. கூட்டுறவுச் சங்கத்தினைப் பதிவு செய்வது தொடர்பான முன்மொழிவு ஏற்றுக் கொள்ளப்பட்ட பொதுக் கூட்டத் தீர்மான அறிக்கை.
5. விண்ணப்பப் பத்திரத்தில் கையொப்பம் வைத்த அங்கத்தவர்கள் அங்கத்துவக் கட்டணம் செலுத்தியதற்கும் அந்நிதிசெயற்குழுவின் பொறுப்பில் காணப்படுகின்றது என்பதற்கான செயற்குழுவின் சான்றிதழ்.
6. சங்கம் அமைந்துள்ள முகவரியின் அமைவிடத்தைக் காட்டும் வரைபடம். ($4 \times \frac{1}{2} = 2$ புள்ளிகள்)

(iv)

தனியார் கம்பனி	பொதுக்கம்பனி
1. ஆகக்கூடிய பங்குதாரர் எண்ணிக்கை 50 ஆக இருத்தல்	1. உச்ச அளவு தொடர்பாக எந்த வரையறையுமில்லை.
2. ஆகக் குறைந்த இயக்குநர் எண்ணிக்கை 01 ஆகும்.	2. ஆகக் குறைந்த இயக்குநர் எண்ணிக்கை 02 ஆகும்.
3. கம்பனிகளின் பங்குகளை பகிரங்கமாக வெளியீடு செய்தல் தடுக்கப்பட்டுள்ளது.	3. பங்குகளை அல்லது ஏனைய பிணைப் பகிரங்கமாக வெளியீடு செய்ய முடியும்.
4. கடனை மீளச் செலுத்தும் ஆற்றல் தொடர்பான பரிசீலனை இன்றி அனைத்துப் பங்குகாரரின் விருப்பப்படி இலாபத்தினை பகிர்ந்தளிக்க முடியும்.	4. பங்குதாரர்களுக்கு இலாபம் வழங்கப்பட முன் கடன் மீளச் செலுத்தும் ஆற்றல் தொடர்பாக பரிசீலனை செய்யப்பட வேண்டியிருத்தல்.

($4 \times 1 = 4$ புள்ளிகள்)

(v) (அ) 1. முதலீட்டுக்கான வருவாய்
2. அபாயத்தின் அளவு ($Risk$)
3. திரவத்தன்மை
4. முதலீட்டு நன்மை
5. உரிமையாளர் ஆகும் வாய்ப்பு ($4 \times \frac{1}{2} = 2$ புள்ளிகள்)

(ஆ) 1. நிலத்தை ஒழுங்கு செய்தல்
2. கட்டடத்தை நிர்மாணித்தல்
3. மின்சக்தி வழங்குதல்
4. தொடர்பாடல் வசதி வழங்குதல்
5. நீர் வசதியை ஏற்படுத்தல்
6. போக்குவரத்துக்கான பாதையை ஒழுங்கு செய்தல்
7. கழிவுப் பொருள் அகற்றும் வசதி ($4 \times \frac{1}{2} = 2$ புள்ளிகள்)

03) (i) (அ) 1. புதிய தொழில் வாய்ப்புக்கள் உருவாக்கப்படல்.
2. வருமானத்துக்கான சந்தர்ப்பங்கள் தோன்றுதல்.
3. புதிய பொருட்கள், சேவைகளைப் பயன்படுத்தும் சந்தர்ப்பங்கள் கிடைக்கப் பெறல்.
4. மக்களின் வாழ்க்கைத் தரம் உயர்வடைதல்.
5. நிறை தொழில் மட்டம் உருவாகுதல்.
6. பிரதேச வளங்கள் உற்பத்திக்குப் பயன்படுத்தப்படல்.
7. புதிய சந்தைகள் அபிவிருத்தியடைதல். ($4 \times \frac{1}{2} = 2$ புள்ளிகள்)

(ஆ) பெறுமதியினை வழங்கும் ஏதேனும் ஒன்றைச் செய்வதற்கு ஆபத்துக்களை எதிர்கொள்ளத் தயாராக இருக்கும் நபர் முயற்சியாளர். (1 புள்ளி)

தற்போது செயற்பட்டுக் கொண்டிருக்கின்ற வணிகமொன்றில் பணியாற்றிக் கொண்டு புதிய கண்டுபிடிப்புக்களை அறிமுகம் செய்து மாற்றங்களை ஏற்படுத்தும் நபர் உள்ளக முயற்சியாளர். (1 புள்ளி)

(ii) (அ) 1. நிலையான அரசியல் பொருளாதாரப் பின்னணி காணப்படல்.
2. போதுமான உட்கட்டமைப்பு வசதிகள் காணப்படல்.
3. நிதி மற்றும் வரிச்சலுகைகள் போன்ற ஊக்குவிப்புக்களைப் பெற்றுக் கொடுத்தல்.
4. விரிவான சந்தை காணப்படல்.
5. நிறுவன ரீதியான வசதிகள் விற்பனை வசதிகள் போன்றவைகளைப் பெற்றுக் கொடுத்தல். ($4 \times \frac{1}{2} = 2$ புள்ளிகள்)

(ஆ) **ஒற்றுமைகள் :**

1. மத்திய வங்கியின் அங்கீகாரம் பெற்றது.
2. பொது மக்களிடமிருந்து வைப்புக்களை ஏற்றுக் கொள்ளும்.
3. அரச, தனியார் அமைப்புக்களாக செயற்படல். ($2 \times \frac{1}{2} = 1$ புள்ளி)

வேற்றுமைகள் :

உரிமம் பெற்ற வணிக வங்கிகள்	உரிமம் பெற்ற விசேட வங்கிகள்
1. நடைமுறைக் கணக்கை பேணமுடியும்	1. நடைமுறைக்கணக்கை பேணமுடியாது
2. அந்நியசெலாவணிக் கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடலாம்.	2. ஈடுபட முடியாது.
3. மத்திய வங்கியில் பதிவு செய்ய இழிவு மூலதனத் தேவைப்பாடு 10 பில்லியன் $(Billion)$	3. இழிவு மூலதனத் தேவைப்பாடு 05 பில்லியன் $(Billion)$

($2 \times \frac{1}{2} = 1$ புள்ளி)

(iii) (அ)

அலகுப் பொறுப்பாட்சி நிறுவனம்	நிதிக் கம்பனி
1. இலங்கை பிணைகள் பரிமாற்று ஆணைக்குழுவின் அனுமதி பெற்றது.	1. மத்திய வங்கியின் நாணய சபையின் அனுமதி பெற்றது.
2. அலகுரிமையாளர், அலகு நம்பிக்கைப் பொறுப்பாளர், நிதி முகாமைத்துவக் கம்பனி என மூன்று பிரிவினர்கள் உள்ளடக்கப்படுவர்.	2. பங்குதாரர் மட்டும் உள்ளடக்கப்படுவர்.
3. முதலீட்டு வழியைத் தெரிவு செய்தல்	3. கடன் வழங்குதல்
4. வரையறுக்கப்பட்ட பொதுக்கம்பனி இல்லை.	4. வரையறுக்கப்பட்ட பொதுக் கம்பனி

($2 \times 1 = 2$ புள்ளிகள்)

(ஆ) **புறக்குறிப்பிடல் :-**

காசோலையின் முகப்பில் குறிப்பிடப்பட்டுள்ள முறையில் பெறுபவர் தனது பெயரை காசோலையின் பின்பக்கத்தில் எழுதுதல் புறக்குறிப்பிடல் எனப்படும். (1 புள்ளி)

குறுக்குக்கோடிடல் :-

காசோலையொன்றின் முகப்பில் சமாந்தரமாக இரு கோடுகள் வரைதல் அல்லது அக்கோடுகளினுள் வணிக வங்கியொன்றின் பெயரைக் குறிப்பிடுதலை காசோலையில் குறுக்குக் கோடிடல் எனப்படும். (1 புள்ளி)

(iv) 1. காசோலைத் தீர்ப்பனவு தொழிற்பாட்டினை மேற்கொள்வதனால் மிக விரைவாக வணிகர்களுக்கிடையேயான கொடுக்கல் வாங்கல்கள் இடம்பெறும்.

2. பல்வேறு பெறுமானங்களைக் கொண்டதான தாள், குற்றி நாணயங்களை வெளியீடு செய்வதனால் எந்தவொரு பெறுமானம் கொண்ட கொடுக்கல் வாங்கலொன்றினையும் நிறைவேற்றிக் கொள்ள மடியும்.
3. ஊழியர் சேமலாப நிதியை முகாமை செய்வதன் மூலம் வணிகத்தின் ஊழியர்களுக் கிடையே பாதுகாப்புத் தன்மை உறுதிப்படுத்தப்பட்ட ஊழியர் பிரிவினர் உருவாதல்.
4. சிறியளவிலான வணிகங்களது வளர்ச்சி கருதிப் பல்வேறு செயற்றிட்டங்களையும் கடன் ஆலோசனை முறைகளையும் அறிமுகம் செய்தல்.
5. நிதிக் கம்பனிகளுக்கு அனுமதிப் பத்திரங்கள் பெற்றுக் கொடுத்தல், மேற்பார்வை செய்தல் என்பவற்றின் மூலம் வணிகத்துறையில் நீடித்த வாழ் தன்மைக்கு பங்களிப்புச் செய்தல்.

($4 \times 1 = 4$ புள்ளிகள்)

(v) (அ) பல்வேறு நட்ட அச்சங்களுக்கு முகங்கொடுத்துள்ள காப்புறுதி செய்பவர்களின் மூலம் காப்புறுதிக் கம்பனிக்குச் செலுத்தப்படும் தவணைக்கட்டணத்தினால் காப்புறுதி நிதியம் உருவாக்கப்படுகின்றது. தவணைப் பணத்தினைச் செலுத்தும் நபர்களிடையில் யாரேனுமொருவருக்கு ஏற்படும் நட்டத்திற்காகக் காப்புறுதிக் கம்பனியானது இழப்பீட்டுத் தொகையை அந்நிதியத்தின் மூலம் வழங்கப்படுவதனால் இழப்பு பலரிடம் பங்கிடப்படுகிறது. (2 புள்ளிகள்)

(ஆ)
1. காப்புறுதியானது வணிக இடர்களைக் காப்பீடு செய்வதன் காரணமாக வணிகங்களை ஆரம்பிப்பதற்கு முதலீட்டாளர்கள் ஊக்குவிக்கப்படுவார்கள்.
2. அகால மரணம், அங்கவீனமான நிலை அல்லது சுகவீனமுற்ற நிலை போன்ற நிலைமைகளில் நபர்களுக்குப் பணரீதியான பாதுகாப்புக் கிடைக்கின்றது.
3. காப்புறுதிக் கம்பனி தமது நிதியை மீண்டும் முதலீடு செய்வதன் காரணமாக நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்குத் தேவையான மூலதன உருவாக்கலுக்கு காப்புறுதி துணையாக இருத்தல்.
4. கடலில் ஏற்படும் இடர்களுக்கான காப்புறுதி காரணமாக சர்வதேச வியாபாரம் முன்னேற்றமடைவதற்குத் துணையாக இருத்தல். ($4 \times \frac{1}{2} = 2$ புள்ளிகள்)

04) (i) (அ) காப்புறுதி செய்யப்பட்ட மோட்டார் வாகனமொன்று விபத்து நட்டம் ஏற்படாமையால் அல்லது சிறு நட்டங்கள் ஏற்பட்டமையால் காப்புறுதி செய்யப்பட்டுள்ள ஒரு ஆண்டின் எதுவித நட்டஈடும் காப்புறுதி செய்வோரால் கோரப்படாதிருப்பின் அடுத்த ஆண்டு காப்புறுதியை புதுப்பிக்கையில் காப்புறுதிக் கட்டணத்தில் கழிவு வழங்கப்படும் இக்கழிவு காப்புறுதி செய்வோருக்கு இலாபமாகையால் ஈடு கோரப்படாத மிகை ஊதியம் எனப்படும். (2 புள்ளிகள்)

(ஆ)
1. பயணம் முடியும் வரையிலும் ஒரே வகையான போக்குவரத்துச் சாதனத்தைப் பயன்படுத்தக்கூடியதாய் இருத்தல்.
2. தேவைக்குப் பொருந்தக்கூடிய முறையில் ஊடகத்தினை தெரிவு செய்யக்கூடியதாய் இருத்தல்.
3. தேவைப்படும் எவ்வேளையிலும் பெருந்தெருவினைப் பயன்படுத்தக் கூடியதாயிருத்தல்.
4. குறுகிய தூரப் பயணத்திற்காக வேகமான முறையொன்றாயிருத்தல்.

($4 \times \frac{1}{2} = 2$ புள்ளிகள்)

(ii) 1. **வழி / பாதை :**
போக்குவரத்திற்காகப் பயன்படுத்தப்படும் பல்வேறு வழிகளாகும்.
உதாரணம் : பெருந்தெரு, நீர்வழி ஆகாய வழி, புகையிரதப் பாதை

2. **ஊடகம் / சாதனம் :**
பல்வேறு பாதைகளில் பயணிக்கும் வாகனங்கள் ஊடகமாகும்.
உதாரணம் : மோட்டார் வாகனம், துவிச்சக்கரவண்டி, படகு, விமானம்

3. **சக்தி / வலு :**
வெவ்வேறு சாதனத்தையும் இயக்கச் செய்வதற்குப் பயன்படுத்தப்படுவது சக்தி அல்லது வலுவாகும்.
உதாரணம் : மனிமுயற்சி, நிலக்கரி, மின்சாரம், எரிவாயு

4. **தரிப்பிடம் / நிலையம் :**
போக்குவரத்துச் சாதனம் பிரயாணக் கருமத்தின் போது நிறுத்தப்படுகின்றவை தரிப்பிடங்களாகும்.
உதாரணம் : பேரூந்து தரிப்பிடம், புகையிரத நிலையம், விமான நிலையம், துறைமுகம்

(குறிப்பிட $4 \times \frac{1}{2} = 2$ புள்ளிகள்)

(உதாரணத்துடன் விளக்கம் $4 \times \frac{1}{2} = 2$ புள்ளிகள்)

(iii) (அ) 1. குறைந்த கிரயம்

2. மிக விரைவு

3. நேரத்தை மீதப்படுத்தலாம்

4. பாதுகாப்பு

5. தகவல்கள் ஒரே நேரத்தில் இலத்திரனியல் ஊடகங்கள் மூலம் பலருக்கு அனுப்பக் கூடியதாக உள்ளது.

6. இலத்திரனியல் ஊடகம் உலகம் முழுவதும் வியாபித்துள்ளது.

7. உபகரணங்களின் விலை வீழ்ச்சி ($4 \times \frac{1}{2} = 2$ புள்ளிகள்)

(ஆ) 1. விலைகளைச் சீராகப் பேண கையிருப்புக்களை களஞ்சியப்படுத்தல்.

2. உற்பத்தியாளரிடம் வாங்கி அதிகளவில் களஞ்சியப்படுத்தல், எந்நேரத்திலும் பொருள் கிடைக்கச் செய்தல்.

3. பொருத்தமான வகை, போதுமான அளவு, பொருட்களை உரிய காலங்களில் விற்பனைக்கு விடுதல்.

4. சந்தைப்படுத்தல் தகவல்களை உற்பத்தியாளருக்கு தெரியப்படுத்தல்

5. சில்லறை வியாபாரிகளுக்கு கடன் வசதியும், உற்பத்தியாளருக்கு முற்பண வசதியும் வழங்குதல்.

6. சில்லறை வியாபாரிகளுக்கு தகவல், ஆலோசனை வழங்கல்.

7. பிரச்சார, விளம்பர நடவடிக்கைகளில் ஈடுபடல். ($4 \times \frac{1}{2} = 2$ புள்ளிகள்)

(iv) 1. உற்பத்தி செய்ய முடியாத பொருட்களை இறக்குமதி செய்யமுடிதல்.

2. மேலதிக உற்பத்திகளை ஏற்றுமதி செய்ய முடிதல்.

3. சர்வதேச வியாபார தொடர்புகள் வளர்ச்சியடைதல்.

4. வெளிநாட்டு செலாவணியை உழைக்க முடிதல்.

5. நவீன தொழில்நுட்பங்களும் முகாமைத்துவத் தேர்ச்சியும் வளர்ச்சியடைதல்.

6. புதிய சர்வதேசச் சந்தைகள் உருவாகுதல்.

7. சர்வதேச ஒத்துழைப்புக்கள் அதிகரித்தல் ($4 \times 1 = 4$ புள்ளிகள்)

(v) (அ)

சட்டமுறைப்பணம்	இலத்திரனியல் பணம்
1. மத்திய வங்கியால் மட்டும் வெளியிடப்படும்.	1. வணிக வங்கிகள் நிதிக் கம்பனிகளும் வெளியிடும்.
2. கொடுக்கல் வாங்கல்களிற்கு சகலரும் பொதுவாக ஏற்றல்.	2. வெளியிடும் ஒப்பந்தம் செய்யும் நிறுவனங்கள் ஏற்றல்.
3. நாட்டிற்குள் பயன்படுத்தப்படும்	3. உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் பயன்படுத்தலாம்.
4. பாதுகாப்பு கொண்ட செல்கையில் குறைந்தது.	4. பாதுகாப்பு கூடியது.

($2 \times 1 = 2$ புள்ளிகள்)

(ஆ) 1. வணிகத்திலிருந்து வணிகம் ($B2B$)

2. வணிகத்திலிருந்து வாடிக்கையாளர் ($B2C$)

3. வாடிக்கையாளரிலிருந்து வாடிக்கையாளர் ($C2C$)

4. அரசாங்கத்திலிருந்து பிரஜைகள் ($G2C$) ($4 \times \frac{1}{2} = 2$ புள்ளிகள்)

பகுதி - II

05) (i) (அ) 1. போட்டிக்கு வெற்றிகரமாக முகம்கொடுக்க.
2. முரண்பாடான பிரச்சினைகளுக்கு முகம்கொடுக்க.
3. பற்றாக்குறையான வளங்களின் உச்சப் பயன்பாடு.
4. அக்கறை செலுத்தும் தரப்பினரின் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றுதல்.
5. மாறுபடும் வணிகச் சூழலுக்கு முகங்கொடுக்க வேண்டிய தேவை
6. சமூகப் பொறுப்புக்களில் திருப்தியை ஏற்படுத்தும் தேவை.
7. சர்வதேச ஒப்பந்தங்களின் நிபந்தனைகளை நிறைவேற்ற வேண்டிய தேவை.
8. வேலை தொடர்பான வேறுபாடுகளுக்கு முகம்கொடுக்க வேண்டிய அதிகரிப்பு.

($4 \times \frac{1}{2} = 2$ புள்ளிகள்)

(ஆ) **வினைத்திறன் :**
நிறுவனத்தின் நோக்கங்களையும் இலக்குகளையும் நிறைவேற்றிக் கொள்ளும் பொழுது வரையறுக்கப்பட்ட வளங்களை வீணாக்காது பயன்படுத்துவது வினைத்திறன் ஆகும்.
(1 புள்ளி)

விளைதிறன் :
நிறுவனமொன்று எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை குறித்த கால வரையறையினுள் உச்சத் தரத்துடன் அடைந்து கொள்ளல் விளைதிறன் ஆகும். (1 புள்ளி)

(ii) (அ) 1. சரியான தகவல்கள்
2. சரியான நேரம்
3. இலகுத் தன்மை
4. சிக்கனத் தன்மை
5. நெகிழ்வுத் தன்மை
6. நடைமுறைச் சாத்தியம்
7. செயற்பாடுகளை அவதானித்தல்
8. பொருத்தமான நடவடிக்கைளை மேற்கொள்ள உதவுதல். ($4 \times \frac{1}{2} = 2$ புள்ளிகள்)

(ஆ) A - பலங்கள், பலவீனங்கள், சந்தர்ப்பங்கள், சவால்கள் என்பவற்றை இனங்காணல்.
B - தூரநோக்கு, இலட்சியநோக்கு, நோக்கம், இலக்கு என்பவற்றை உருவாக்கல்.
C - திட்டத்தை நடைமுறைப்படுத்தல்.
D - திட்டவெற்றியினை அளவிடலும் கட்டுப்படுத்தலும். ($4 \times \frac{1}{2} = 2$ புள்ளிகள்)

(iii) 1. பொருட்கள், இயந்திரங்கள் என்பவற்றைப் பயன்படுத்துகின்ற செயற்றிறன் அதிகரித்தல்.
2. இடவசதிகளின் மூலம் உச்சப் பயன்பாட்டினைப் பெற்றுக் கொள்வதற்கு முடியுமாக இருத்தல்
3. பொருள் பயன்படுத்தலின் கிரயத்தை குறைத்து கொள்வதற்கு முடியுமாக இருத்தல்.
4. பொருட்களும் ஊழியர்களும் அசையும் போது ஏற்படக்கூடிய தடைகள் குறைவடைதல்.
5. விபத்துக்கள் குறைவடைதல்
6. தொடர்பாடல், ஒருங்கிணைத்தல் கண்காணிப்பு என்பன இலகுவாக இருத்தல்.
7. ஊழியர்களின் மனேபலம் அதிகரிக்கும். ($4 \times 1 = 4$ புள்ளிகள்)

(iv) (அ) 1. ஊழியர்களைப் பயிற்றுவித்தல்.
2. பதவி உயர்வுகளைப் பெற்றுக் கொடுத்தல்.
3. சுகாதார வசதிகளுடனான விடுதி உணவு, குடிபானங்கள், சீருடைகள் என்பவற்றைப் பெற்றுக் கொடுத்தல்.
4. தொழில் பாதுகாப்பை உருவாக்கிக் கொடுத்தல்.
5. பொருத்தமான வேலைச் சூழலை உருவாக்கிக் கொடுத்தல்.
6. முகாமையுடன் ஊழியர்களைத் தொடர்புபடுத்தல்.
7. சுற்றுலாக்களை ஒழுங்குபடுத்திக் கொடுத்தல். ($4 \times \frac{1}{2} = 2$ புள்ளிகள்)

(ஆ) 1. முகாமைத்துவத்தினை வினைத்திறனாக பயன்படுத்திக் கொள்ளல்.
2. நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்திக் கொள்ளல்.
3. நிதி சார்ந்த, நிதி சாராத ஊழியர் ஊக்குவிப்புக்களைப் பெற்றுக் கொடுத்தல்.
4. திர்மானம் எடுத்தலுக்கு ஊழியரது பங்களிப்பினைப் பெற்றுக் கொள்ளல்.
5. தரவட்டத்தை பயன்படுத்தல்.
6. பொருட்களை மீண்டும் பயன்படுத்துவதற்காக மீள் சுற்று வட்டச் செயற்பாட்டினை மேற்கொள்ளல். ($4 \times \frac{1}{2} = 2$ புள்ளிகள்)

(v) 1. செயற்றிறனும், வினைத்திறனும் அதிகரிக்கும்.
2. பொருட்களின் தரம் உயர்வடையும்.
3. உற்பத்திக் கிரயம் குறைந்து பொருட்களின் விலை குறையும்.
4. உற்பத்தியின் இயளவு அதிகரிக்கும்.
5. வீண் விரயங்கள் குறைவடையும்.
6. சாதகமான வேலை சூழலொன்று உருவாகும். ($4 \times 1 = 4$ புள்ளிகள்)

06) (i) (அ) 1. சந்தையினுள் நிலைத்திருப்பதற்கு.
2. நிகழ்கால இலாபத்தினை உச்சப்படுத்துவதற்கு.
3. சந்தைப் பங்கை உச்சப்படுத்துவதற்கு.
4. சந்தைப் பங்கினை உறிஞ்சுக் கொள்வதனை உச்சப்படுத்துவதற்கு.
5. தரத் தலைமைத்துவம். ($4 \times \frac{1}{2} = 2$ புள்ளிகள்)

(ஆ) 1. விளம்பரம்
2. விற்பனை மேம்படுத்தல்.
3. மக்கள் தொடர்பும் பிரசித்தப்படுத்தலும்.
4. நிகழ்வுகளும் அனுபவங்களும்.
5. தனிப்பட்ட விற்பனை
6. நேரடிச் சந்தைப்படுத்தல். ($4 \times \frac{1}{2} = 2$ புள்ளிகள்)

(ii) (அ) **சந்தைத் துண்டமாக்கல் :**
முரண்பாடான பண்புகளைக் கொண்ட அனைத்து சந்தைகளையும் சமூகப் பண்புகளுடன் கூடிய குழுக்களாக வகைப்படுத்தி வேறுபடுத்துதல் சந்தைத் துண்டமாக்கல் எனப்படும். (1 புள்ளி)

இலக்குச் சந்தை :
அனைத்துச் சந்தையினுள் உள்ள பல்வேறுபட்ட பண்புகளைக் கொண்ட வாடிக்கையாளரிடையே ஒரே மாதிரியான பண்புகளைக் கொண்ட வாடிக்கையாளர்களை இனங்கண்டு அவர்களிலும் நிறுவனத்திற்கு மிகவும் கவர்ச்சியாகவும், இலாபத் தன்மையுடனும் சேவை செய்யக்கூடிய சந்தையின் பகுதி இலக்குச் சந்தை எனப்படும். (1 புள்ளி)

(ஆ) நுகர்வோன் (1 புள்ளி)
எல்லாச் சந்தைப்படுத்தல் நடவடிக்கைகளும் நுகர்வோரை நோக்கி நுகர்வோருக்காக நுகர்வோரைத் திருப்திப்படுத்துவதையே அடிப்படையாகக் கொண்டது. (1 புள்ளி)

(iii) 1. நுகர்வோரின் தேவைகளும் விருப்பங்களும் :
நுகர்வோரின் தேவைகளையும் விருப்பங்களையும் முன் கூட்டியே அறிந்து கொண்டு அதற்கிசைவாக பொருட்களும் சேவைகளும் உருவாக்கப்படல்.

2. நுகர்வோரின் திருப்தியும் வியாபாரியின் இலாபமும் :
நுகர்வோர் திருப்தி அடைந்து கொள்வதை முதன்மையாகக் கொண்டு அதனூடாக வியாபாரி இலாபம் அடைதல்.

3. ஒருங்கிணைக்கப்பட்ட சந்தைப்படுத்தல் தந்திர உபாயம் :
சந்தைப்படுத்தல் கவலை மாறிகள் (பொருள், விலை, இடம், மேம்படுத்தல்) நுகர்வோரின் தேவைக்கு ஏற்ப மாற்றியமைத்தல். (குறிப்பிட $2 \times 1 = 2$ புள்ளிகள்)
(விளக்கம் $2 \times 1 = 2$ புள்ளிகள்)

(iv) (அ)
1. தனிநபர்களையும், நிறுவனங்களையும் முதலீடு செய்வதற்காக தூண்டுதல்.
2. முதலீட்டாளர்கள் தமது மூலதனத்தை பங்குச் சந்தையில் முதலீடு செய்வதன் மூலம் பல்வேறுபட்ட அனுகூலங்களைப் பெற்றுக் கொள்ள முடியும்.
3. வரையறுத்த பொதுக்கம்பனிகளுக்கு பாரிய மூலதனத்தைத் திரட்டக்கூடியதாக இருத்தல்.
4. அரசின் பிணைப் பத்திரங்களை விற்பனை செய்வதன் மூலம் அரசுக்குத் தேவையான நிதியினைப் பெற்றுக் கொள்ள முடியும்.
5. வெளிநாட்டு முதலீட்டாளர்களை நாட்டினுள் கவரக்கூடியதாக இருத்தல்.
6. கம்பனிகளின் பங்குகளுக்கு பெறுமதியொன்று உருவாகுதல்.
7. கம்பனிகளின் நன்மதிப்பும் கீர்த்தியும் உயர்வடைதல். ($4 \times \frac{1}{2} = 2$ புள்ளிகள்)

(ஆ)

முதலாம் தரச்சந்தை	இரண்டாம் தரச்சந்தை
1. கம்பனி ஒன்றின் பங்கு முதன் முதலாக பங்குச் சந்தை ஊடாக விற்பனை செய்தல்	1. முதலாம் தரப் பங்குச் சந்தை ஊடாக விற்பனை செய்யப்பட்ட பங்குகளை மீளவும் கொள்வனவு விற்பனை செய்தல்
2. கொள்வனவு மட்டும் நடைபெறும்.	2. கொள்வனவு விற்பனை நடைபெறும்.

($2 \times 1 = 2$ புள்ளிகள்)

(v) (அ)
1. எதிர்காலத்தில் காசு மிகை ஒன்று ஏற்படுமாயின் அதனை முன்கூட்டியே அறிந்து கொள்ள முடிவதால் அப்பணத்தினை வினைத்திறனாக முதலீடு செய்ய முடிதல்.
2. எதிர்காலத்தில் காசுக் குறைவொன்று ஏற்படுமாயின் அதனையும் முன்கூட்டியே அறிந்து அதற்கு முகங்கொடுப்பதற்குத் தயாராக முடியும்.
3. உண்மையான பணத்தினது செயற்பாட்டினை ஒப்பிடுவதன் மூலம் காசு தொடர்பான திட்டமிடலும் கட்டுப்பாடும் இலகுவாகும். ($2 \times 1 = 2$ புள்ளிகள்)

(ஆ) கம்பனியொன்று மேலதிக மூலதனத் தேவைக்குப் பங்குகளை வழங்கும் போது கம்பனியில் தற்போதுள்ள சாதாரண பங்குத்தாரர்களுக்கு ஒரு குறிப்பிட்ட விகிதத்திற் கேற்ப பங்குகள் வழங்கப்படும். உரித்து வழங்கல் மூலம் கிடைக்கின்ற பங்குகளுக்கு பங்குதாரர் கம்பனிக்கு பணம் செலுத்துதல் வேண்டும். (2 புள்ளிகள்)

07) (i) (அ) **அனுகூலங்கள்**
1. தொழில் தொடர்பான சிறப்புத் தேர்ச்சி ஏற்படும்.
2. நேரம் மீதப்படுத்தப்படும்.
3. உற்பத்தித்திறன் அதிகரிக்கும்.
4. வினைத்திறன் அதிகரிக்கும்.
5. விரயம் குறைவடையும்.
6. முகாமைச் செயற்பாடுகள் இலகுவாகக் காணப்படும். ($2 \times \frac{1}{2} = 1$ புள்ளி)

பிரதிகூலங்கள்
1. தொழில் சலிப்புத் தன்மை ஏற்படும்.
2. ஒரு ஊழியரது அல்லது ஊழியத் தொகுதியினது வேலை தாமதம் மொத்த உற்பத்தி நடவடிக்கைக்கும் தாமதத்தை ஏற்படுத்தும்.
3. அதி சிறப்பத் தேர்ச்சி காரணமாக ஊழியர் நகர்வு கடினம்.
4. ஊழியர் புரள்வு ஊழியர் வரவின்மை அதிகரிக்கும். ($2 \times \frac{1}{2} = 1$ புள்ளி)

(ஆ)

சாதாரண பங்குதாரர்	முன்னுரிமைப் பங்குதாரர்
1. நிறுவனத்தில் உரிமையுண்டு	1. உரிமையில்லை
2. வாக்களிக்கும் உரிமையுண்டு	2. வாக்குரிமையில்லை.
3. பங்குலாபம் கிடைப்பது நிச்சயமில்லை	3. பங்குலாபம் நிலையானது.
4. உயர்வான இடர்	4. இடர் குறைவு
5. பங்குலாபம் வரையறுக்கப்படாதது	5. பங்குலாபம் வரையறுக்கப்பட்டது.

($4 \times \frac{1}{2} = 2$ புள்ளிகள்)

(ii) (அ)
1. போட்டிக்கு முகம் கொடுக்க
2. இடைநடுவர்களைக் குறைப்பதனூடாக விலைகளைக் குறைத்து விற்பனை அதிகரிக்க முடியும்.
3. விலைகூடிய வரையறுக்கப்பட்ட கேள்வியுள்ள பொருட்களுக்கு இம்முறை மிகப் பொருத்தமானது.
4. வாடிக்கையாளருடன் நேரடியாக தொடர்பு ஏற்படுவதால் விற்பனையாளருக்கும் வாடிக்கையாளருக்கும் இடையில் கருத்துக்களை பரிமாற்றிக் கொள்ள முடியும்.

($4 \times \frac{1}{2} = 2$ புள்ளிகள்)

(ஆ)
1. குறுங்கால நிதித்தேவைப்பாடு
2. நீண்டகால நிதித்தேவைப்பாடு ($2 \times \frac{1}{2} = 1$ புள்ளி)

✶ அன்றாட வணிக நடவடிக்கைகளை நடாத்திச் செல்வதற்கு தேவையான நிதியினைக் குறிக்கும். ($\frac{1}{2}$ புள்ளி)

✶ வணிகமொன்றை ஆரம்பிக்கும் போது வணிக நடவடிக்கைகளை நடாத்திச் செல்லும் போதும் ஆரம்பத்தில் தேவையான நடைமுறையல்லாச் சொத்துக்களைக் கொள்வனவு செய்வதற்குத் தேவையான நிதியைக் குறிக்கும். ($\frac{1}{2}$ புள்ளி)

(iii)
1. ஊழியர் வினைத்திறனை அபிவிருத்திச் செய்தல்.
2. ஊழியர் கிரயத்தினைக் கட்டுப்படுத்தல்.
3. ஊழியர் அபிவிருத்தியினை ஏற்படுத்தல்.
4. ஊழியர் தொடர்பான சட்ட ரீதியான நிபந்தனைகளை நிறைவு செய்தல்.
5. ஊழியர் நலன்புரிச் சேவை
6. தொழிலுக்கு உரிய நேரத்திற்கு ஊழியர்களைச் சேர்த்துக் கொள்ளல்.
7. ஊழியர் ஊக்குவிப்பினை உருவாக்கல். ($4 \times 1 = 4$ புள்ளிகள்)

(iv) (அ) நிரந்தர பதவியில் இணைத்துக் கொள்ளப்பட்ட புதிய ஊழியர் அப்பதவியில் ஊர்ஜிகப்படுவதற்கு முன்னர் சேவையினைச் செய்ய வேண்டிய காலம் தகுதிகாண் காலம் எனப்படும். (2 புள்ளிகள்)

(ஆ)
1. வாய்மொழி, எழுத்து மூலம் எச்சரிக்கை செய்தல்.
2. தண்டனை வழங்குதல் (சம்பளத்தை இடைநிறுத்துதல், சம்பளத்தைக் குறைத்தல்)
3. தகுதிகாண் காலத்தை நீடித்தல்.
4. வேலையை முடிவுறுத்துதல். ($4 \times \frac{1}{2} = 2$ புள்ளிகள்)

(v) (அ)
1. ஊழியர் போராட்டம், வேலை நிறுத்தங்கள் என்பவை காரணமாக வணிகச் செயற்பாடுகள் தடைப்படும்.
2. ஊழியர் உற்பத்தித் திறன் பாதிக்கப்படல்.
3. ஊழியர் உளரீதியாக பாதிக்கப்படல்.
4. வளங்கள் வீணடிக்கப்படல்
5. முழு நிறுவனத்தினதும் வினைதிறனும் வினைத்திறனும் பாதிக்கப்படல்.

($4 \times \frac{1}{2} = 2$ புள்ளிகள்)

(ஆ) **அகமூலம் :**

1. தொழில் அறிவித்தல்
2. திறன் அட்டவணை
3. அகத்தே உள்ள ஊழியர்களை அறிமுகப்படுத்தல்.
4. பதிவான திட்டம். ($2 \times \frac{1}{2} = 1$ புள்ளி)

புறமூலம் :

1. ஊடக விளம்பரங்கள் மூலம்.
2. கடந்தகால ஊழியர்கள் மூலம்
3. கல்வி தொழில்சார் நிறுவனங்களின் மூலம்
4. தொழில் முகவர் நிலையங்கள் மூலம்
5. இணைய வலையமைப்பின் மூலம்.

($2 \times \frac{1}{2} = 1$ புள்ளி)

08) (i) (அ)

1. பொருத்தமானது
2. சரியானது
3. பூரணமானது
4. நம்பகமானது
5. கிடைக்கக்கூடியதாக இருத்தல்.
6. விளங்கிக் கொள்ளக்கூடியதாக இருத்தல்.
7. சிக்கனத் தன்மை
8. இற்றைவரைத் தன்மை ($4 \times \frac{1}{2} = 2$ புள்ளிகள்)

(ஆ)

1. கொடுக்கல் வாங்கல் செயன்முறைமை
2. அறிவுப் பணி முறைமை
3. அலுவலகத்தன்னியக்க முறைமை
4. முகாமைத்துவ தகவல் முறைமை
5. தீர்மான உதவி முறைமை
6. நிறைவேற்று உதவி முறைமை ($4 \times \frac{1}{2} = 2$ புள்ளிகள்)

(ii) 1. **உள்ளீடு :**
தகவல் முறைமைக்குத் தேவையான தரவுகளைச் சேகரித்தலை உள்ளீடுகள் எனப்படும்.

2. **செயல்முறை :**
உள்ளீட்டுத் தரவுகளை தகவல்களாக மாற்றீடு செய்யப்படும் செயல்முறையை இது குறிக்கும்.

3. **வெளியீடு :**
ஒழுங்கமைக்கப்பட்ட தரப்பினர்களுக்கு வழங்குதல் வெளியீடாகும்.

:

4. **களஞ்சியப்படுத்தல் :**
முறையாக தோற்றுவிக்கப்பட்ட தகவல்களை எதிர்காலத்தில் தேவைப்படும் சந்தர்ப்பங்களின் போது பயன்படுத்துவதற்காக களஞ்சியப்படுத்தி வைத்தலாகும்.

(குறிப்பிட $4 \times \frac{1}{2} = 2$ புள்ளிகள்)

(விளக்கம் $4 \times \frac{1}{2} = 2$ புள்ளிகள்)

(iii) (அ) LAN :
ஒரு அறையில் அல்லது ஒரு கட்டடத்தில் அல்லது ஒரு வேலைத்தளத்தில் அமைக்கப்பட்டுள்ள கணினிகளையும், வேலைதளங்களையும் ஒன்றோடொன்று தொடர்பு படுத்தி உருவாக்கப்படுகின்ற வலையமைப்பொன்றாகும். (1 புள்ளி)

WAN :

பல நாடுகள் அல்லது பல நகரங்கள் என்பவற்றில் அமைக்கப்பட்டுள்ள கணினிகளையும் ஒன்றோடொன்று தொடர்புபடுத்தி கட்டியெழுப்பப்படுகின்ற கணினி வலையமைப்பாகும்.

(1 புள்ளி)

(ஆ) 1. உலகளாவிய web தளத்திற்கு செல்லலாம்.
2. மின் அஞ்சல் வசதி பெறலாம்.
3. விரும்பிய செய்தி பெறலாம்.
4. உரையாடல் வசதிகள்
5. ஒரே நேரத்தில் பலர் உரையாடலாம்.
6. ஆவணங்களைப் பரிமாற்றலாம்.
7. $Tele\ NET$ வசதி. ($4 \times \frac{1}{2} = 2$ புள்ளிகள்)

(iv) (அ) 1. நிறைவேற்றுச் சுருக்கம்
2. வணிக விபரணம்
3. சந்தைப்படுத்தல் திட்டம்
5. செயற்பாட்டுத் திட்டம்
5. மனித வளத் திட்டம்
6. நிதித்திட்டம் ($4 \times \frac{1}{2} = 2$ புள்ளிகள்)

(ஆ) 1. உற்பத்தி உபாய வழிமுறைகள்
2. மேம்படுத்தல் உபாய வழிமுறைகள்
3. விலை உபாய முறைகள்
4. விநியோக உபாய வழிமுறைகள். ($4 \times \frac{1}{2} = 2$ புள்ளிகள்)

(v) (அ) 1. மதிப்பிடப்பட்ட செயல் திட்டக் கிரயம்.
2. மதிப்பிடப்பட்ட இலாப நட்டக் கூற்று
3. மதிப்பிடப்பட்ட காசுப் பாய்ச்சல் கூற்று.
4. கடனை மீளச் செலுத்தும் அட்டவணை
5. மதிப்பிடப்பட்ட ஐந்தொகை ($4 \times \frac{1}{2} = 2$ புள்ளிகள்)

(ஆ) 1. நடைமுறையல்லாச் சொத்துக்களின் காசுக் கொள்வனவுகள்
2. நடைமுறைச் சொத்துக்களின் காசுக் கொள்வனவுகள்
3. கடன் கொடுத்தோருக்கான கொடுப்பனவுகள்.
4. கடன்களை மீளச் செலுத்துதல்
5. குத்தகைக் கொடுப்பனவுகள்
6. காப்புறுதி மின்சாரச் செலவுக் கொடுப்பனவுகள். ($4 \times \frac{1}{2} = 2$ புள்ளிகள்)